© [සියලු ම හිමිකම් ඇවිරිණි. முழுப் பதிப்புரிமையுடையது. All Rights Reserved].

ජාතික අධ්‍යාපන ආයතනය
විභාග දෙපාර්තමේන්තුව
தேசிய கல்வி நிறுவகம்
பரீட்சைகள் துறை
National Institute of Education
Department of Examinations

# கல்விமாணி (விசேட) பட்டம் (2017 – 2021)

## பகுதி – I – 2020 (மாதிரிப் பரீட்சை)

| | |
|---|---|
| **BH 0152** | **தமிழ்மொழி**<br>**Tamil** |

**2020.07.31** **0900 மணி – 1200 மணி** **நேரம்: 3 மணித்தியாலங்கள்**

**அறிவுறுத்தல்கள்**

- பகுதி I இன் எல்லா **வினாக்களுக்கும்** விடையளிக்குக.
- பகுதி II இன் **நான்கு** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- தெளிவான கையெழுத்தில் எழுதுக.

---

## பகுதி - I

- **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

**(1) ஒவ்வொரு கூற்றுக்கும் கீழே நான்கு விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மிகச்சரியான விடையின் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள இடைவெளியில் எழுதுக.**

(1) பின்வருவனவற்றுள் அறநெறிக்காலம்
1. சங்க காலம் 2. சங்கமருவிய காலம்
3. பல்லவர் காலம் 4. சோழர் காலம் (……….)

(2) ஆற்றுப்படை இலக்கியமாகக் கொள்ளப்படுவது,
1. மலைபடுகடாம் 2. முல்லைப்பாட்டு
3. குறிஞ்சிப்பாட்டு 4. பட்டினப்பாலை (……….)

(3) திருநாவுக்கரசு நாயனார் வாழ்ந்த காலமாகக் கொள்ளப்படுவது,
1. அறநெறிக்காலம் 2. பொற்காலம்
3. பக்தி நெறிக்காலம் 4. தத்துவ நெறிக்காலம் (……….)

(4) ‘ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவருக்கு
ஒருமைமறம் ஏமாப்புடைத்து’ எனும் குறள்பா உணர்த்துவது,
1. கல்வி ஏழுபிறப்பும் உதவாது 2. கல்வி வாழ்வை மேம்படுத்தும்
3. கல்வி ஏழை வாழ்வை உயர்த்தும் 4. கல்வி ஏழு பிறப்பிற்கும் உதவும்
(……….)

(5) “கார் என்று பேர் படைத்தாய் …” என்ற பாடலைப் பாடியவர்
1. இரட்டையர் 2. காளமேகப்புலவர்
3. பாரதியார் 4. சேங்கோட்டுப்புலவர் (……….)

(6) “சாம்பல் நிறமொரு குட்டி கருஞ்
சாந்தின் நிறமொரு குட்டி ...” என்ற கவிதையினை இயற்றியவர்
1. இரட்டையர் 2. காளமேகப்புலவர்
3. பாரதியார் 4. சோமசுந்தரப்புலவர் (..........)

(7) திருக்குறளின் மூன்றாவது பால்
1. காமத்துப்பால் 2. பொருட்பால்
3. அறத்துப்பால் 4. முப்பால் (..........)

(8) ‘மானும்மரை யினமும்மயி லினமுங் கலந் தெங்கும்’
என்ற பக்திப்பாடலைப் பாடியவர்
1. மணிவாசகர் 2. சுந்தரர்
3. அப்பர் 4. சம்பந்தர் (..........)

(9) மீட்சி இல்லாத்துன்பம் எனும் கருத்தை விளக்கும் பழமொழி
1. ஆசை வெட்கமறியாது
2. உரலில் அகப்பட்டது உலக்கைக்குத்தப்புமா
3. மரமேறி வீழ்ந்தவனை மாடேறி மிதித்தது போல்
4. சூடு கண்ட பூனை அடுப்பங்கரையை நாடாது (..........)

(10) பூசிமெழுகுதல் எனும் மரபுத்தொடர் குறிப்பது,
1. குற்றத்தை மறைத்தல் 2. குற்றத்தை ஏற்றல்
3. குற்றத்தை மேலால் ஒப்புக்கொள்ளல் 4. குற்றத்தை நிராகரித்தல் (..........)

(11) வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியது போல எனும் கருத்தை விளக்கும் உவமைத் தொடர்
1. துன்பமற்ற வாழ்வு 2. துன்பத்திற்கு மேல் துன்பம்
3. புண்மீது வேல் பாய்ச்சல் 4. வாழ்வு நிலையற்றது (..........)

(12) அடியற்ற மரம் போல எனும் கருத்தை விளக்கும் உவமைத் தொடர்
1. வேரில்லா மரம் 2. பெருந்துன்பம்
3. துடித்தல் 4. பெருங்கோபம் (..........)

(13) செய்யாதவன் என்பதனைப் பிரித்து எழுதினால்,
1. செ + ய் + தவன் 2. செய் + த் + த் + அவன்
3. செய் + ஆத் + தவன் 4. செய் + ஆத் + அவன் (..........)

(14) இருபெயரொட்டுப் பண்புத்தொகை
1. தண்ணீர் 2. கடற்கரை
3. தென்னை மரம் 4. இட்டிலி (..........)

(15) க, ச, த, ப ஆகிய வல்லின மெய்கள்
1. 12 உயிர்களுடனும் சேர்ந்து சொல்லுக்கு முதலில் வரும்
2. 18 மெய்களுடன் சேர்ந்து மொழிக்கு முதலில் வரும்
3. 7 நெடிலுடன் சேர்ந்த மொழிக்கு முதலில் வரும்
4. 5 குறிலுடன் சேர்ந்து மொழிக்கு முதலில் வரும் (..........)

CONFIDENTIAL

(16) வந்த என்பது

1. வினை எச்சம்
2. பெயரெச்சம்
3. தொழிற்பெயர்
4. ஏவல் பன்மை (……….)

(17) கருவி வேற்றுமை என்பது

1. முதலாம் வேற்றுமை
2. எட்டாம் வேற்றுமை
3. ஏழாம் வேற்றுமை
4. மூன்றாம் வேற்றுமை (……….)

(18) இது என்பது

1. அஃறிணை பன்மை
2. அஃறிணை ஒருமை
3. உயர்திணை பன்மை
4. உயர்திணை ஒருமை (……….)

(19) பின்வருவனவற்றுள் பெயர் இடைநிலை

1. கவிஞன்
2. மாணவன்
3. புலவன்
4. கண்ணன் (……….)

(20) பின்வருவனவற்றுள் நெடில் தொடர்க் குற்றியலுகரம்

1. பருகு
2. அங்கு
3. காடு
4. பெய்து (……….)

(2 புள்ளிகள் x 20 = 40 புள்ளிகள்)

CONFIDENTIAL

© [සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]



**கல்விமாணி (விசேட) பட்டம் (2017 – 2021)**

**பகுதி – I – 2020**

**BE 0152 - தமிழ்மொழி**

**பகுதி II**

- **நான்கு** வினாக்களுக்கு **மாத்திரம்** விடை எழுதுக.

02. (அ) சங்கமருவிய காலத்தில் எழுந்த நூல்களைப் பொருளடிப்படையில் வகைப்படுத்துக. (07 புள்ளிகள்)

(ஆ) தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்கமருவிய காலத்தை இருண்ட காலம் எனக் கொள்வது பொருந்துமா? ஆராய்க. (08 புள்ளிகள்)

03. (அ) பல்லவர் காலத்தில் எழுந்த சமயம்சாரா இலக்கியங்கள் குறித்துக் கருத்துரைக்க. (07 புள்ளிகள்)

(ஆ) பக்தி இயக்க வளர்ச்சிக்கு நாயன்மார்களும் ஆழ்வார்களும் ஆற்றிய பங்களிப்பினை விளக்குக. (08 புள்ளிகள்)

04. (அ) சார்பெழுத்துக்களை எடுத்துக்காட்டி விளக்குக. (07 புள்ளிகள்)

(ஆ) இடைச் சொற்களின் பயன்பாட்டினை எடுத்துக்காட்டுக. (08 புள்ளிகள்)

05. கவிதையில் உள்ள உரைப்பகுதியைப் படித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடைதருக.

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்
இனிதாவது எங்கும் காணோம்
பாமரராய் விலங்குகளாய் உலகனைத்தும்
இகழ்ச்சி சொலப்பான்மை கெட்டு
நாமமது தமிழரெனக் கொண்டு இங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்லீர்
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்

யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல் இளங்கோவைப் போல்
பூமிதனில் யாங்கனுமே பிறந்ததில்லை
உண்மை, வெறும் புகழ்ச்சி இல்லை

ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்
வாழ்கின்றோம் ஒரு சொல் கேளீர்
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ்முழக்கம் செழிக்கச் செய்வீர்

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புது நூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகின்மை இல்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டோர்
அதை வணக்கம் செய்தல் வேண்டும்

உள்ளத்தில் உண்மையொளி யுண்டாயின்
வாக்கினிலே ஒளி உண்டாகும்
வெள்ளத்தின் பெருக்கைப் போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவுமாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார்
தெள்ளுற்ற தமிழமுதின் சுவை கண்டார்
இங்கமரச் சிறப்புக் கண்டார்

(அ) கவிதையில் வெளிப்படுத்தப்படும் பொருள் யாது? (05 புள்ளிகள்)

(ஆ) பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்'
இவ்விரிகளால் வெளிப்படுத்தப்படும் கருத்தினை விளக்குக. (04 புள்ளிகள்)

(இ) புலவர் தமிழ்மொழியின் சிறப்பினை எவ்வாறு எடுத்துக்காட்டுகின்றார்? (06 புள்ளிகள்)

06. பாடசாலையில் புதிதாக க.பொ.த. உயர்தர வகுப்பு ஒன்றினை ஆரம்பிப்பது தொடர்பாக வலயக்கல்விப் பணிப்பாளருக்கு ஒரு கடிதம் எழுதுக. (15 புள்ளிகள்)

07. பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பினைத் தெரிவு செய்து 300 – 350 சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக.
1. வாழ்வை வெற்றி கொள்ளுதல்
2. கல்வியே அழியாச் செல்வம்
3. மாணவரின் மொழியாற்றலை வளர்த்தல்
4. கல்வி மறுசீரமைப்பை நடைமுறைப்படுத்தல்
5. மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்

(15 புள்ளிகள்)

*******

CONFIDENTIAL